Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 275

திங்கட்கிழமை 28 ஒகஸ்ட் 2023

ஆவணி 11 ஆம் நாள் – வள்ளுவர்





# பிரிவினையை ஏற்படுத்தி ஆட்சியை தக்கவைக்க சதி

## மக்களே அவதானம் என்று எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒகஸ்ட் 28**

மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து பிரித்தாளும் சூழ்ச்சிமூலம் ஆட்சியைத் தக்கவைப்பதற்கும், பிடிப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. குருந்தூர்மலை விவகாரம் எல்லாம் அதன் அங்கமே. இந்த பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் மக்கள் சிக்கக்கூடாது என்றவாறாக அரச எதிர்த்தரப்பு பிரதானிகளான அநுரகுமார மற்றும் சஜித் இருவரும் தெரிவித்துள்ளனர். ——— »11

### மாம்பழம் ரூபா 162,000!

யாழ்., ஒக. 28
வவுனியாவில் மாம்பழமொன்று ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது. »11

### பிரமிட் மோசடி; சீனர்கள் கைது

கொழும்பு, ஒக. 28
சர்வதேச மட்டத்தில் பிரமிட் மோசடித் திட்டத்தில் ஈடுபட்டு வந்த சீனப்பிரஜை »11

### யாழில் சூரியன் உச்சம்!

யாழ்., ஒக. 28
சூரியன் இன்று திங்கட்கிழமை யாழ்பாணத்துக்கு நேராக உச்சம் கொடுக்கும் »11



## தெல்லியூர் துர்க்கைக்கு இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஒக. 28
வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. »11

## கேணிகள், சிறிய நீர்நிலைகளில் இன்றுமுதல் சிரமதானம் ஆரம்பம்

### மாவட்டச் செயலர் சிவபாலசுந்தரன் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக. 28
இன்றிலிருந்து ஒருவாரத்துக்குள் சிறிய நீர்நிலைகள், கேணிகளை பிரதேச செயலாளர்களின் ஒருங்கிணைப்பு மேற்பார்வையில், அந்தந்த நீர் நிலைகளுக்குப் பொறுப்பான பிரதேசசபைகள் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் போன்றன இணைந்து சிரமதானம் மூலம் அதனைத் துப்புரவு செய்து எதிர்காலத்தில் நீரைத்தேக்கி வைக்கக் கூடியதாக மாற்றவேண்டும் என யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபால »11

## கத்திமுனையில் நேற்று 20 பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக. 28
யாழ்ப்பாணம் - சங்கிலியன் வீதிப்பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை கத்தி முனையில் 20 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. »11

## வறட்சியால் பாதிப்பு விவரங்கள் திரட்டுக

யாழ்ப்பாணம், ஒக. 28
வறட்சியின் காரணமாக ஏற்பட்ட விவசாயப் பாதிப்பு, கூலிக் குடும்பங்களின் பாதிப்பு போன்ற விவரங்களை இருவார காலத்துக்குள் திரட்டி வழங்குமாறு பிரதேச செயலர்களை யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபால »11

வவுனியா இரட்டைக் கொலை

## பிரதான சந்தேகநபரின் சகோதரர் மீது தாக்குதல்

வவுனியா, ஒக. 28
வவுனியா இரட்டைக்கொலைகள் தொடர்பான வழக்கில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் சகோதரர் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட் »11

பழைய மாணவர் ஒன்றுகூடலில்

## நடனமாடிய நபர் மயங்கி வீழ்ந்து சாவு!

யாழ்ப்பாணம், ஒக. 28
பழைய மாணவர் ஒன்றுகூடலின்போது நடனமாடிக் கொண்டிருந்தவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். தெல்லிப்பழைப் »11

## பாலியல் அத்துமீறலால் பெண் துறவிகள் ஓட்டம்

### விகாரையொன்றில் சம்பவம்

கொழும்பு, ஒக. 28
மினுவாங்கொடவில் உள்ள பௌத்த விகாரையிலிருந்து மூன்று இளம்பெண் பௌத்த துறவிகள் தப்பியோடிய விவகாரத்தில், விகாரையின் தலைமைத்துறவியின் பாலியல் சீண்டல்களே இதற்குக் காரணம் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
விகாரையின் தலைமை மத குருவின் பாலியல் சீண்டல்களால், 12, 15, 18 வயதுடைய அந்தப் பெண் துறவிகள் »11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




'ஆத்தில போற தண்ணி அண்ணை குடி, தம்பி குடி' எண்டு ஒசியில கிடைக்கிறதையெல்லாம் ஒருகை பார்க்கிறது தமிழருக்கு கைவந்த கலை. அப்பிடிச் சனத்தின்ர வரியில கிடைச்ச காசையெல்லாம் விசுக்கியடிச்சு விலாசம் காட்டிப்போட்டு போயிருக்கிறார் முந்தின ஆளுநர் ஜீவன் தியாகராசா. வடக்கு ஆளுநர்மாருக்கு கொழும்பிலயும் ஒரு ஒப்பீஸ் திறந்து , அங்க போற நேரத்தில தங்கி நிண்டு வேலை செய்யிறதுக்கு அரசாங்கம் காசு ஒதுக்கிறது. வழக்கமா இதுக்கு முதல் இருந்த ஆளுநர்மாரெல்லாம் பொதுவா ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுத்து, அதிலதான் ஒப்பீஸ் போட்டிருந்தவை. ஆனால் ஜீவன் என்ன செய்தாரெண்டால், அந்த ஆளுநர் அலுவலகத்தை மூடிப்போட்டு, வேறொரு இடத்தில ஒப்பீஸ் போட்டிருக்கிறார். முந்தின ஒப்பீஸில இருந்த கதிரை, மேசை தொடக்கம் குண்டுசீ வரை எல்லாத்தையும் தான் திறந்த புது ஒப்பீஸுக்கு கொண்டு போட்டார். இப்பிடி புது ஒப்பீஸ் திறக்கிறது அவரின்ர உரிமை, அதில என்ன வில்லங்கம் இருக்கு? எண்டு நீங்கள் யோசிக்கலாம். பெரும் வில்லங்கம் இருக்கு.

முந்தின ஆளுநர் ஜீவன், ஒரு என்.ஜீ.ஓ.காரர். அதுக்கெண்டு ஒரு ஒப்பீஸ் சொந்தமா இருக்கு. அங்கதான் கொழும்பில இருந்த ஆளுநர் அலுவலகச் சாமான்களையெல்லாம் கொண்டுபோய் போட்டிருக்கிறார். மிஞ்சின சாமான்களை தன்ர கொழும்பு வீட்டிலை பறிச்சிருக்கிறார். அதுக்குப் பிறகு தன்ர என்.ஜீ.ஓ. (தன்னார்வத் தொண்டு நிறுவனம்) இயங்கிற ஒப்பீஸையே ஆளுநர் அலுவலகம் எண்டும் கணக்குக்காட்டி, மாசம் 2 லட்சம் ரூபாப்படி வாடகை எண்ட பேரில ஆட்டையைப் போட்டிருக்கிறார். கிட்டத்தட்ட ஒண்டரை வருசமா இப்பிடி வாடகை எண்ட பேரில அவருக்கு 36 லட்சம் ரூபா சுளையாக் கிடைச்சிருக்கு. அதோட தன்ர என்.ஜீ.ஓ அலுவல்களுக்கு ஆளுநர் அலுவலகச் சாமான்களைத்தான் பாவிச்சுமிருக்கிறார். இப்பிடியெல்லாம் அனுபவிச்சதாலதான் ஆள் பதவியை விட்டுப் போகமாட்டன் எண்டு அடம்பிடிச்சிருக்கிறார். அதைவிட ஆளுநர் பதவி போன பிறகும் கூட, கொழும்பு அலுவலகத்தில இருந்து தன்ர வீட்டுக்கும், என்.ஜீ.ஓ ஒப்பீஸுக்கும் கொண்டு போய் வைச்சிருக்கிற சாமான்களையும் ஆள் இன்னமும் திருப்பி ஒப்படைக்கேலையாம்.

இப்ப புதிசா வந்த ஆளுநர், கொழும்பு போகேக்க ஆளுநர் அலுவலகத்தில போய் வேலையைச் செய்வம் எண்டேக்கதான் அங்க இப்ப அலுவலகமே இல்லையெண்ட விசயம் தெரியவந்திருக்கு. அதுக்குப் பிறகுதான் இப்பிடி முந்தி இருந்த இடத்தில இருந்த ஒப்பீஸை, ஜீவன் முழுசா விழுங்கி ஏவறை விட்ட கதை தெரிய வந்திருக்கு. உடுப்பு மட்டும் வெள்ளையும் சொள்ளையுமா இருந்தாப் பத்தாது. செயலுமெல்லோ வெள்ளையா இருக்கோணும். இது ஏன் முந்தின ஆளுநருக்குத் தெரியாமல் போனது?



- பட்சி

## யாழ் . மாவட்டத்தில் ஜுலைமாதக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்.மாவட்ட முதியோர்களுக்கான ஜுலை மாதக் கொடுப்பனவுகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படவுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகள் அவர்களின் வங்கிக் கணக்குகளிலும் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களால் கொடுப்பனவுக்குரிய காசோலைகள் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை கடந்த ஜுன் மாதம் வரையிலான கொடுப்பனவுகள் சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## சம்பந்தப் பிள்ளையாருக்கு இன்று சப்பறம், நாளை தேர்

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை சிறி வரதவிக்ன விநாயகர் (சம்பந்தப் பிள்ளையார்) ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் சப்பறத் திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

நாளை 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 30ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (ம)







### நல்வாழ்வு மிதந்து வந்திடுமே!

ஆறுமுகனைப் பார்த்திடவே
தீராத நோயும் தீர்ந்து போகும்!
முத்துக் குமரனைப் பார்த்திடவே
முத்தான வாழ்வு மலர்ந்து வரும்!
வேலவனைப் பார்த்திடவே
வெஞ்சினமது தகர்ந்து போகும்!
பழனிப் பதி வாழ்பவனை பார்த்திடவே
பஞ்சமெல்லாம் தீர்ந்து போகும்!
நல்லூர் நாயகனைப் பார்த்திடவே
நல்வாழ்வு மிதந்து வந்திடுமே!

மிஷாந்தி செல்வராஜா ஜெயசிங்கம்



# முல்லைத்தீவின் பெரும்பகுதி வனவளத்திணைக்களத்திடம்

## வாழ்வதற்கு காணியின்றி மக்கள் அவதி

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மக்கள் குடியிருப்பதற்குக்கூட காணி அற்றிருக்கும் நிலையில், மாவட்டத்தில் அதிகளவான நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருக்கின்றது.

- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 389 குடும்பங்கள் குடியிருக்கக் காணிகள் அற்ற நிலையில் உள்ளன. 89 ஆயிரத்துக்கும் அதிகமான கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவை இல்லை.

மாவட்டத்தில் 28 ஆயிரத்து 626 இளைஞர், யுவதிகள் தங்கள் தொழில் முயற்சிக்காக தலா ஒரு ஏக்கர் நிலம் கோரியிருந்தனர்.

அதற்கு மாவட்டச் செயலகம் சாதகமான பதில் எதுவும் வழங்கவில்ல.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் 2 இலட்சத்து 22 ஆயிரத்து 6 ஏக்கர், அதாவது 36.72 சதவீத நிலம் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேலதிகமாக ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 484 ஏக்கர் நிலத்தை வனவளத் திணைக்களம் கையகப்படுத்தியிருந்தது. தற்போது காடு பேணல் சட்டத்தின் கீழ் ஒதுக்கக்காடுகளால் மீண்டும் 42 ஆயிரத்து 631 ஏக்கர் நிலப்பரப்பை வனவளத் திணைக்களம் கோரியிருக்கின்றது.

இந்த நிலப்பரப்பும் வழங்கப்பட்டால் முல்லைத்தீவு மாவட்டத்தின் 74.24 சதவீத நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் கொண்டு செல்லப்படும். மிகுதி நிலப்பரப்பின் பெரும்பகுதி யை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கனிய மணல் திணைக்களம், படையினர் எனப் பலரும் ஆளுகை செய்கின்றனர். வனவளத் திணைக் களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப் பரப்பில் 50 ஆயிரம் ஏக்கர் காணியை மாவட்ட அபிவிருத்திக்காகத் தரவேண்டும் என்று மாவட்டச் செயலகம் விடுத்த கோரிக்கைக்கு இதுவரை திணைக்களம் பதிலளிக்கவில்லை - என்றார். (எ-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறட்சி உக்கிரம்

# பயிர்ச்செய்கைகள் அழிவடைவு ஜீவனோபாயத்துக்குப் பாதிப்பு

## தருமபுரம் மக்கள் வேதனை



கிளிநொச்சி, ஓக. 28

கடந்த சில மாதங்களாக நாட்டில் கடும் வறட்சி நிலவிவரும் நிலையில், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து ஜீவனோபாயத்தை இழந்து வருகிறோம் என கிளிநொச்சி - தருமபுரம் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்;

தருமபுரம்,விசுவமடு, நெத்திலியாறு போன்ற பகுதிகளில் வாழை, தென்னை, கமுகு போன்ற பயிர்ச்செய்கையை மேற்கொண்டு அந்த வருமானத்தில் எமது வாழ்வாதாரத்தை நாம் ஈட்டி வருகின்றோம்.

தற்போதைய கடும் வறட்சியுடனான காலநிலையால் தோட்டப் பயிர்ச்செய்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டு கருகிப்போயுள்ளன.

முன்னைய காலங்களில் இந்தக் காலப்பகுதியில் மழைவீச்சி பதிவாகும். இம்முறை 8 மாதங்கள் கடந்தும் மழையில்லாது காணப்படுகிறது.

இந்தநிலையில் வாழைக்குலைகள் மற்றும் தேங்காய் ஆகியவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து எமது நாளாந்த ஜீவனோபாயம் இழக்கப்பட்டுள்ளது.

எனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கத் திடமிருந்து நிவாரணங்களைப் பெற்றுத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-113)

# வெப்பத்தால் மடியும் மீன்கள்

கிளிநொச்சி, ஓக. 28

கிளிநொச்சி, ஆனையிறவு களப்புப் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் மற்றும் அதிக உப்புச் செறிவு காரணமாக பெருமளவான சிறிய மீன்கள் உயிரிழந்து கரையொதுங்குகின்றன. (ச-27-113)



# துணுக்காய் கிராமங்களில் கால்நடைகள் தொடர் களவு

## தடுக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 28

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக இனந்தெரியாதோரால் கால்நடைகள் களவாடப்பட்டு வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

இங்குள்ள ஆலங்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைக்கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் உள்ளிட்ட கிராமங்களில் ஆள்நடமாட்டமற்ற வேளைகளில் வாகனங்களில் வருவோர் கால்நடைகளைக் கடத்திச் செல்கின்றனர். இந்தப் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் மரக்கடத்தல்களில் ஈடுபடுவோராலேயே அவை களவாடப்படுகின்றன.

கிராமங்களின் காட்டுப்பகுதிகளில் கால்நடைகள் இறைச்சியாக்கப்பட்ட எச்சங்களை அவதானிக்க முடிகிறது.

கடந்த 10 நாள்களுக்கு முன்பு பழைய முறிகண்டியில் 6 ஆடுகள் வரை திருடப்பட்டுள்ளன என்று உரிமையாளர்களால் ஐயன்கன்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. கால்நடைகளைக் களவாடிச் செல்வதால் எமது ஜீவனோபாயம் இழக்கப்படுகிறது.

எனவே பொலிஸார் உடன் நடவடிக்கை எடுத்து கால்நடைகள் களவாடப்படுவதைத் தடுக்க வேண்டும்- என்றனர். (ச-13)


# மரண அறிவித்தல்



மலர்வு 24.01.1961

உதிர்வு 26.08.2023

## திரு. சின்னத்தம்பி லோகநாதன் (லோகன்)

விவேகானந்தா வீதி, மஞ்சத்தடி, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு சின்னத்தம்பி லோகநாதன் (லோகன்) அவர்கள் 26.08.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் தவமணிதேவி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் புஸ்பாதேவியின் அன்புக் கணவரும் சுபேக்கா, சுபேதன் ஆகியோரின் அன்புத்தந்தையும் டமேஸ்தரனின் மாமனும் நிவர்ணா, துவர்ணிகா அவர்களின் அன்புப் பேரனும் பரமேஸ்வரன், தவராசா, காலஞ்சென்ற சந்திரகுமாரி, ஜெயராஜா, றகுபதி ஆகியோரின் உயிர் சகோதரனும் இராசரத்தினம், செல்வரத்தினம், தவமணிதேவி, மல்லிகாதேவி, பரமேஸ்வரன், குணரத்தினம், பத்மாவதி, இரத்தினேஸ்வரன், இலங்கேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2023) திங்கட்கிழமை காலை 08.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவேகானந்தா வீதி, மஞ்சத்தடி, இணுவில்

தகவல் : குடும்பத்தினர்

(CS 26104) (M-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, சீனாவுடன் பிரச்சினை இல்லை!

## வெளிவிவகார அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஓக.28

இலங்கைக்கும், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளில் எந்தவிதமான பதற்றங்களும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அடுத்த வாரம் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வரவுள்ள நிலையில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி சீன ஆய்வுக்கப்பலான 'ஷி யான் - 06' இலங்கை வருகின்றது.

சீன ஆய்வுக் கப்பல் வருகைக்கு இந்தியா கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது என்று கூறப்படும் நிலையில், இலங்கை இரு நாடுகளின் அதிகாரப் போட்டி அழுத்தங்களுக்குள் சிக்கியுள்ளது என்றும் இருதரப்பு உறவுகளில் பதற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் வெளியான தகவல்கள் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் வருகை, சீன ஆய்வுக்கப்பலின் வருகைஎன்பனநிகழ்ச்சிநிரலிடப்பட்டதன் அடிப்படையில் நடைபெறுகின்றமையால் எந்தவிதமான குழப்பங்களும் இல்லை.

அதேநேரம், இலங்கைக்குள் போர் மற்றும் ஆய்வுக்கப்பல்கள், விமானங்களின் வருகையின்போது வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்காக 'நிலையான செயற்பாட்டுப் பொறிமுறை' வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

இலங்கை அரசாங்கம் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு உறவுகளைக் கொண்டுள்ளது. இரு நாடுகளும் இலங்கைக்கு நீண்ட கால ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றன. அண்மையில் இந்தியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருக்கின்றார்.

அதேபோன்று சீனாவுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன சென்றிருக்கின்றார்.

ஜனாதிபதியின் பயணத்தின்போது எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு அமைவாக திருகோணமலையை பொருளாதார அபிவிருத்தி வலயமாக மேம்படுத்துவதற்கு இந்தியாவும் பங்களிக்கவுள்ளது. எரிபொருள், எரிசக்தி விடயத்திலும் அந்நாடு உடன்பாடுகளை எட்டியுள்ளது. அதற்கு அமைவாக செயற்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்காக எதிர்காலத்தில் இந்தியாவிலிருந்து உயர்மட்டத் தரப்பினர் இலங்கைக்கு வரவுள்ளனர் - என்றார். (எ-இ)

## மணிவிழா வாழ்த்து

28.08.2023




யா/ சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாசாலை ஆசிரியர்

திருமதி யாழினி றஞ்சன் அவர்களின்

60ஆவது அகவையில்

அவர் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 09 . 1953

மறைவு 26 . 08 . 2023

### திருமதி தேவதாஸ் மேரி அல்போன்சா மருதமலர்

2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவதாஸ் மேரி அல்போன்சா மருதமலர் நேற்று முன்தினம் (26.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறகோரியோண் யோண்மாக்கிறேற் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான டேவிட் யோசப் மேரி யோசப்பின் தம்பதியரின் மருமகளும், யோசப் தேவதாஸ் அவர்களின் அன்பு மனைவியும், டெஸ்லினின் அன்புத் தாயாரும், றினோல்டாவின் பாசமிகு மாமியாரும், நோபேட், றொபின்சன், வசந்தா, விக்டோறியா, மக்ரலின், கலிஸ்ரா, கொன்சன்ரைன் றொகான் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றித்வினின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (28.08.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் (இல.135, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்) நடைபெற்று, மாலை 4.00 மணியளவில் யாழ். மரியன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.135, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



தோற்றம் 19.09.2000

மறைவு 15.07.2023

கடந்த (15.07.2023) சனிக்கிழமை சிவபதப்பேறடைந்த எமது ஏக புத்திரன்

அமரர்

### புஸ்பராசா எழில்நாத்

(தொழில்நுட்பபிரிவு முதலாம் வருடம் யாழ். பல்கலைக்கழகம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28.08.2023) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] வீதி, வண்ணார்பண்ணை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிலவு - தமிழர்கள் - இலங்கை

நிலவின் தென்துருவத்தில் 'சந்திராயன்' என்ற விண்கலத்தை வெற்றிகரமாகத் தரையிறக்கியிருக்கின்றது இந்தியா. இதன்மூலம் தென்துருவத்தில் விண்கலத்தை நிலைநிறுத்துதல், இயங்கு நிலையை அடைதல், ஆய்வுகளை ஆரம்பித்தல் ஆகிய மூன்று படிநிலைகளையும் வெற்றிகரமாகக் கையாண்ட முதல் நாடாக பாரதம் தன்னைப் பதிவுசெய்திருக்கின்றது. இந்த வெற்றியை இந்தியாவுக்குக் கிட்டிய வெற்றி என்பதை விடவும், ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் கிடைத்த வெற்றியாகவே கொள்ளவேண்டும். அதிலும், இஸ்ரோ விஞ்ஞானிகளில் பெருமளவானவர்கள் தமிழர்கள் என்பதால் 'ஈழத் தமிழர்களாக' நாம் கொஞ்சம் கூடுதல் கர்வம் கொள்ளலாம்.

விண்வெளி ஆராய்ச்சி என்றதும் எங்களின் நினைவுக்கு வருவது இரண்டு நிறுவனங்கள்தான். ஒன்று அமெரிக்காவின் நாஸா. இன்னொன்று ரஷ்யாவின் ரொஸ்கொஸ்மொஸ். வல்லாதிக்கப் போட்டியில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான மோதல் நிலைக்குச்சற்றும் குறைவில்லாததுதான் நாஸா, ரொஸ்கொஸ்மொஸ் இடையிலான விண்வெளிப் போட்டி. இவ்வாறிருக்கையில், இந்த இரு நாடுகளுக்கும் அவற்றின் விண்வெளி நிறுவனங்களுக்கும் 'பாடமெடுக்கும் வகையிலான' பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியிருக்கின்ற இந்தியாவையும் அதன் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவையும் எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும்.

இன்று உலகின் பெரும் விண்வெளி நிறுவனமாக உருவெடுத்துள்ள இஸ்ரோ கடந்துவந்த பாதையொன்றும் செங்கம்பள நடைபயணம் அல்ல. ரொக்கெட் 'மாதிரிப் பரிசோதனைகளுக்கான' அதன் பகுதிகளை முன்னைய காலங்களில் சைக்கிளில் வைத்து காவித் திரிந்துதான் இன்றைக்கு இப்படியொரு வளர்ச்சியை எட்டியிருக்கிறது இஸ்ரோ. அந்தக் காலங்களில் மேற்கத்தேயத்துக்கே உரித்தான எள்ளல்களும், நக்கல்களும், ஊடகங்களின் 'வெள்ளை மனோநிலை'க் கருத்துகளும் இஸ்ரோவின் மீது தாராளமாக ஏவிவிடப்பட்டன. ஆனால், இன்று நிலவின் தென்துருவத்தின் மாதிரிகளையும், வெற்றிகரமான இந்தத் தரையிறக்கத்தின் விஞ்ஞான நுணுக்கங்களையும் எப்போது இஸ்ரோ பகிர்ந்துகொள்ளும் என்று காத்து நிற்கின்றன அதே மேற்குநாடுகள்.

இந்தியாவுக்கும், இஸ்ரோவுக்கும் இந்த இமாலய வெற்றி எவ்வாறு சாத்தியமானது? இஸ்ரோவின் புராணம் இலங்கையில் எதற்கு?

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்டிய அதே காலப்பகுதிகளில்தான் இலங்கைக்கும் சுதந்திரம் கிட்டியது. இலங்கையில் உள்ளதுபோன்ற மதப்பிரிவினைகள், இனப்பிளவுகள் இந்தியாவிலும் உள்ளனதான். அது இரண்டாம் கருத்தின்றிய நிலைப்பாடு. ஆனால், 'ஒரு நாடாக' இந்தியா தன்னை வளப்படுத்தியதையும், பலப்படுத்தியதையும் எவராலும் மறுத்துரைத்துவிட முடியாது. தேசிய நலனை முன்னிறுத்தும் வகையிலான 'இந்தியர்கள்' என்ற மனோநிலை அவர்களுக்கு மிகமிக அதிகம். 'இந்திய நலனுக்கு' எது தேவையோ அதைச் செய்வதற்கும் அங்கீகரிப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் இந்தியர்கள் பின்நிற்பதே இல்லை. இதனால்தான் பழங்குடிப் பெண்ணான திரௌபதி முர்மு இன்று இந்தியாவின் குடியரசுத் தலைவராக உள்ளார். ஒரு தமிழரோ அல்லது மலையகத்தைச் சேர்ந்தவரோ இலங்கையின் பிரதமராக – ஜனாதிபதியாக வரும் நிலைக்கு ஒப்பானது இது. ஆனால், அது இலங்கையில் எப்போதுமே சாத்தியமற்றதே. தவிர, இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளாக இருக்கட்டும், நீதித்துறைக் கட்டமைப்பாக இருக்கட்டும் யாவற்றிலும் இன்று தமிழர்களின் ஆதிக்கமே மேலோங்கியும் தீர்க்கமானதாகவும் இருக்கின்றது. தமிழர்கள் மட்டுமல்ல வேறு சிறுபான்மை இனக் குழுக்களும் தாம் சார்ந்த துறைகளில் அங்கு கோலோச்சிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இலங்கையில்...? சுதந்திரத்தின் பின்னரான 75 ஆண்டுகள் இலங்கை எதைத்தான் சாதித்தது? பௌத்த பேரினவாத மனோநிலை இந்த நாட்டை குட்டிச்சுவராக்கி அழித்தொழித்தது, ஆயுதப் போருக்கு வழிவகுத்தது. அதைத் தவிர வேறெதையும் இந்தத் தீவு கண்டதாயில்லை. இன்றும்கூட தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள மதப் பதற்றங்கள் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புச் சிந்தனையின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கின்றன. இவ்வாறான இனவாத – மதவாதச் சகதிக்குள் இருந்துகொண்டு நிலவுப் பயணமெல்லாம் எவ்வளவு பெரிய நப்பாசை? வேண்டுமானால் ஆசைக்கு காசைக் கரியாக்கி நாலைந்து தாமரைக் கோபுரங்களைக் கட்டி இன்னும் கடனாளிநாடாக மாறலாம். அதைத் தவிர இலங்கையில் மகாவம்ச மனோநிலை நீடிக்கும்வரை எந்த ஆணியையும் பிடுங்க முடியாது.

## நாளொரு நல்வார்த்தை

ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தை தொடங்கி வைக்கிறான்;
வாசகன் அதனை முடித்து வைக்கிறான்.

– சாமுவேல் ஜோன்சன் –




# 13ஆவது திருத்தத்துக்கு மகாநாயக்கர்கள் எதி

**கொழும்பு, ஓக.28**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்க தேரர்களுடன் பேச்சு நடத்தவேண்டும் என்று சியாம் நிகாயாவின் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கையிலுள்ள ஏனைய மதத்தலைவர்களுடனும் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான பேச்சை நடத்த வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படக் கூடாது எனும் நிலைப்பாட்டில் மகாநாயக்க தேரர்கள் உள்ளனர். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தினால் பல பாதகமான விளைவுகளை நாடு எதிர் நோக்க நேரிடும். முன்னாள் ஜனாதிபதிகள் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமையின் பின்னணியில் நியாயமான காரணங்கள் இருக்கலாம் - என்றார்.

அதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் நடைமுறை தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் உள்ளிட்ட இலங்கையிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளுடன் ரணில் விக்கிரமசிங்க பேச்சை முன்னெடுத்திருந்தபோதிலும் சிறிலங்கா பொதுஜன பெரமுன நிராகரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## சீனக் கப்பலுக்கு அனுமதி

இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வு செய்ய சீனக் கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி நிறுவனத்துடன் (நாரா) இணைந்து இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சீனக் கப்பலுக்கு வெளிவிவகார அமைச்சின் கோரிக்கையின் பேரில் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. (ஒ-இ)

# குருந்தூர்மலை விவகாரத்துக்கு உடன் தீர்வு காண்பது அவசியம்

## சன்ன ஜயசுமண வலியுறுத்து

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் இனங்களுக்கு இடையே முரண்பாடுகள் அதிகரித்து வரும்நிலையில், அது தொடர்பான நிரந்தரத் தீர்வொன்றை எடுக்கவேண்டுமென்று பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
குருந்தூர் மலையானது தொல்பொருளியல் பகுதியாகும். அதற்கான சான்றாதாரங்கள் பல காணப்படுகின்றன. ஆகவே அந்தப் புராதன இடத்தைப் பேணுவது மிகவும் முக்கியமானதாக உள்ளது. அதேநேரம், அந்தப் பகுதியில் பௌத்தர்கள் மற்றும் இந்துக்கள் வழிபாடுகளைச் செய்துவந்தனர் என்று வரலாற்றின் அடிப்படையில் குறிப்பிடப்படுகிறது.

இந்த மலையின் கீழ்ப் பகுதியிலுள்ள பிரதேசத்தில் தொல்பொருளியல் விடயங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல், இரு சமயத் தலங்களை நிர்மாணிப்பதே பொருத்தமானதாகும். மலையின் கீழ்ப்பகுதியில் தலா ஒவ்வொரு ஏக்கர் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்து மற்றும் பௌத்த தலங்களை நிர்மாணிப்பதன் ஊடாக இரு தரப்பினரும் தமது இறை நம்பிக்கைக்கு அமைவாக வழிபாடுகளை முன்னெடுக்கமுடியும் - என்றார். (எ-இ)

**நாளை** 29.08.2023 செவ்வாய்க்கிழமை ஆவணி 12

சுபநேரம் : 10.35 – 12.05
ராகுகாலம் : 03.05 – 04.35

ஆவணி ஓணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தங்கக்கடன் பெறுவோர் இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 28

**இலங்கையில் தங்கக் கடன் பெறுவோரின் தொகை அதிகரித்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்து கோரல தெரிவித்துள்ளார்.**

இதன்படி, 2021 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு இதுவரையான காலம் வரை தங்கநகைகளை அடகு வைத்து பெற்ற கடன் தொகை 600 பில்லியன் ரூபாவைக் கடந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தொகையானது, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட தங்கக்கடனைவிட அதிகமாகுமென பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் அவசரப் பணத் தேவைகளுக்கு மாத்திரம் தங்க நகைகளை அடகு வைக்கும் நிலை காணப்பட்டதாகவும், தற்போது அடிப்படைத் தேவைகளுக்காக தங்கக் கடன் பெறும் நிலை ஏற்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து நாட்டில் தங்கக்கடன் பெறுவோரின் தொகை கணிசமாக அதிகரித்துள்ளது.

தங்கக்கடன் பெற்றவர்களால் கடனை மீளச்செலுத்த முடியாத நிலையில் தங்கநகைகளை முழுமையாக இழக்கும் நிலைமையும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் வலிந்து தங்கக்கடன் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-இ)

# 102 வீதத்தால் விலை, சேவைக்கட்டணம் அதிகரிப்பு

## பணவீக்க வீழ்ச்சியால் பயனில்லை

கொழும்பு, ஓக.28

2023ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குள் பொருள்களின் விலை மற்றும் சேவைக் கட்டணங்கள் 102 வீதத்தால் அதிகரித்துள்ளன என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் துறைப் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைய 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

உணவு வகைகளின் விலை சுமார் 128 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. உணவு அல்லாத வகைகளின் விலைகள் சுமார் 85 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கைக்கமைய, ஜூலை மாதத்தில் பணவீக்கம் கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது.

அதற்குக் காரணம் பொருள்களின் விலையில் வீழ்ச்சி அல்ல மாறாக பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பு விகிதத்தில் ஏற்பட்ட சரிவே காரணம்.

ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது, ஜூலை மாதத்தில் பணவீக்கம் குறைந்துள்ளது மற்றும் உணவு வகை பணவீக்கம் சுமார் 2.5 சதவீதத்தால் குறைந்தாலும், மக்களுக்கு இது முக்கியமற்ற ஒரு மதிப்பாகும். 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, பணவீக்கம் பெப்ரவரியில் 49 சதவீதமாக அதிகரித்துள்ளது.

49 சதவீத அதிகரிப்பின் பின்னர் 2.5 சதவீதம் குறைந்தால் மக்களால் எந்தவகையிலும் அதன் நன்மையை உணரமுடியாது - என்றார். (எ-இ)



# அமெரிக்க செனட் உறுப்பினர் அடுத்தவாரம் இலங்கை வருகை

கொழும்பு, ஓக. 28

அமெரிக்க செனட்சபையின் வெளிநாட்டு உறவுகள் குழு மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான ஒதுக்கீட்டுத் துணைக்குழுவின் உறுப்பினர் செனட்டர் ரிஸ் வான் ஹோலன் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அத்துடன், நேபாளம் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கும் உத்தியோகபூர்வபயணத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செனட்டர் ரிஸ்வான் ஹோலன் தமது பயணத்தின்போது குறித்த நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார். இதன்படி, எட்டு நாள்களில் முக்கியமான அரச அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புகள், தொழிற்றுறைத் தலைவர்கள், உள்நாட்டு தூதரக ஊழியர்கள் மற்றும் குறித்த நாடுகளில் பணிபுரியும் அமெரிக்கர்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

அத்துடன், அவரது பயணத்தின்போது அமெரிக்க ஒத்துழைப்புத் திட்டங்கள் மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிடவுள்ளார்.

மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு, ஆழமான பொருளாதார உறவுகள், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுதல், ஜனநாயக மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் உட்பட அமெரிக்கா மற்றும் இலங்கை, நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தப் பயணம் அமையவுள்ளது.

மேலும், செனட்டர் ரிஸ்வான் ஹோலன் இலங்கை பயணத்தின்போது கடல்சார் பாதுகாப்பு மற்றும் காலநிலை மற்றும் தொடர்பான பிரச்சினைகளில் பங்காளித்துவத்தை வலுப்படுத்துவதுடன், இலங்கையின் அனைத்து மக்களும் ஜனநாயக செயற்பாட்டில் முழுமையாகவும் நியாயமாகவும் பங்குபற்றுவதை உறுதிப்படுத்த மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான முன்னோக்கிய வழிகள் தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான 75 வருட நட்புறவைக் கொண்டாடும் வகையில் செனட்டர் ரிஸ்வான் ஹோலன் இலங்கை மக்களுடன் இணைந்து கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-இ)

# சொகுசுக் குடியிருப்பில் வசிப்பவர்களிடம் வரி

## அரசு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 28

கொழும்பின் முக்கியமான நகரங்களில் தொடர்மாடி குடியிருப்புகளில் வீடுகளை வாங்கியோர் மற்றும் அதிசொகுசு வீடுகளை வைத்திருப்போர் ஆகியோரிடம் வருமான வரி வசூலிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு வரி வருமானம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரதான நகரங்களில் வீடுகளை வாங்கி, தற்போது அந்த வீடுகளில் வசிப்போரின் விவரங்களை வழங்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் டபிள்யூ.என்.ஏ.விஜேசூரிய, வீட்டு வளாக நிர்வாக நிறுவனங்களுக்குப் பணித்துள்ளார். உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழுள்ள அதிகாரங்களுக்கமைய இந்த எழுத்துமூலக் கோரிக்கை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# தடுப்பூசி ஒவ்வாமையால் நோயாளர் உயிரிழப்பு?

## கொழும்பு மருத்துவமனையில் விசாரணை

கொழும்பு, ஓக.28

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்த நபருக்கு வெட்டுக்காயங்களை மாற்றுவதற்காக கோ அமொக்ஸிகிளேவ் என்ற தடுப்பூசி ஏற்றப்பட்டதையடுத்தே அந்த நபர் உயிரிழந்துள்ளார். தடுப்பூசியால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகவே அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அவருடன் சேர்த்து 32 நோயாளர்களுக்கு இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசி உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றது. தற்போது இந்தத் தடுப்பூசி கொழும்பு தேசிய மருத்துவமனைப் பயன்பாட்டில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். (எ-இ)



# எம்.பி.க்கள் பலரிடம் ஏராளமான ஆயுதங்கள்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக.28

நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் பலரிடம் தற்போதும் நூற்றுக் கணக்கான ஆயுதங்கள் உள்ளன என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1980ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட ஆயுதங்கள் மீள ஒப்படைக்கப்படவில்லை. போர் சூழ்நிலை காரணமாக அரசியல் கட்சிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. சில அரசியல் கட்சிகளுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆயுதங்கள் வழங்கப்பட்ட சில தரப்பினர் தற்போது உயிருடன் இல்லை. அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப்பெற்றுக் கொள்வதில் பெரும் சிக்கல்கள் காணப்படுகின்றது. ஆயுதங்களை தங்கள் கையிருப்பில் வைத்திருக்கும் அரசியல்வாதிகளிடமிருந்து அவற்றை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். இந்தத் தீர்மானம் பெறப்படும்வரையில் அரசியல்வாதிகளிடம் உள்ள ஆயுதங்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்று பொலிஸ்மா அதிபர், ஏனைய பொறுப்பதிகாரிகள் மற்றும் அரச புலனாய்வுப்பிரிவினருக்குப் பணித்துள்ளேன். ஆயுத சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்க ப்படுகின்றன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி கிடைத்தவுடன், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுவின் வேட்பாளர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

மட்டக்களப்பு, ஓக. 28

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு கருவேப்பங்கேணி வட்டாரக்கிளையின் தலைவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தலையில் பலத்த காயமடைந்த அவர் மட்டக்களப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 9.20 மணியளவில் நடந்துள்ளது.

வீட்டிலிருந்து கடைக்குச் சென்று கொண்டிருந்த அவரை கூழாவடி சந்தியில் இனந்தெரியாத நபர்கள் மறித்து தாக்கியுள்ளனர். தலையில் பலத்த காயமேற்பட்ட நிலையில் அவர் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



## வறள்கிறது மன்னார் அந்தரிக்கும் மக்கள்

மன்னார், ஓக. 28

**மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களாக நீடிக்கும் கடுமையான வறட்சி நிலை காரணமாக பல இடங்களில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.**

மன்னார் மடு பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் 952 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 244 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தெரிவித்துள்ளது.

மல்லவராஜர் கட்டையடம்பன், மாதா கிராமம்.பெரிய முறிப்பு,இரணை இலுப்பகுளம், கீரிசுட்டான் போன்ற பகுதிகள் வறண்டு அங்கு குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

பயிர்ச்செய்கையை நம்பியுள்ள மக்களின் வாழ்வாதாரமும் இழக்கப்பட்டதுடன் கால்நடைகளும் தண்ணீரின்றி தவித்துத் திரிகின்றன.

இந்த நிலை தொடருமாயின் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அனர்த்த முகாமைத்துவப்பிரிவு அச்சம் தெரிவித்துள்ளது. (ச-ரி3-213)

## விலைகள் உயர்வு விற்பனை மந்தம்

### பழவியாபாரிகள் கவலை

யாழ்ப்பாணம், ஓக. 28

நிலவும் உக்கிரமான வெப்பநிலை காரணமாக யாழ்.மாவட்டத்தில் பழவகை மற்றும் இளநீர் என்பனவற்றின் விலை உயர்வடைந்துள்ளது. அதனால் அவற்றின் நுகர்வு குறைந்துள்ளது என வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வெப்பமான காலநிலை காரணமாக பழங்கள் மற்றும் இளநீரின் விலை உயர்வடைந்துள்ளது. இந்தநிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக நுகர்வோர் அதனைக் கொள்வனவு செய்ய பின்னடிக்கின்றனர். பழங்களின் விலையை கேட்டுவிட்டு வாங்காது சென்றுவிடுகின்றனர். அதனால் எமது வியாபாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ச-27)

## வாட்டும் வறட்சியால் கடற்றொழில் பாதிப்பு

### கண்டாவளை மக்கள் தவிப்பு

கிளிநொச்சி, ஓக. 28

நிலவும் தற்போதைய கடும் வறட்சி காரணமாக கிளிநொச்சி, கண்டாவளை, புளியம்பொக்கணை பகுதிகளில் கடற்றொழில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்;

இந்தப் பகுதில் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு சுமார் 500 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

தற்போதைய கடும் வறட்சியால் அங்கு கடல்நீரேரிகள் வற்றி வறண்டு வருகின்றன. இங்கு மீன்பிடி மற்றும் இறால்பிடி என்பன பாதிக்கப்பட்டுள்ளதுடன் வாழ்வாதாரமும் இழக்கப்பட்டுள்ளது. கடற்றொழிலில் பெரும் நெருக்கடியை சந்தித்து வரும் எம்மை வறட்சியும் தற்போது வாட்டுகிறது. மீன்பிடித் தொழிலைத் தவிர வேறு தொழிலின்றிய எமக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து வறட்சி நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-113)



## சிறுவரின் மகிழ்வுச் சூழலை போதையால் பறிக்காதீர்கள்!

### புதுக்குடியிருப்பில் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, ஓக. 28

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உடலியல் மற்றும் உணர்வு ரீதியான சிறுவர் துஷ்பிரயோகங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துவருவதை கட்டுப்படுத்தி சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி புதுக்குடியிருப்பில் கடந்த வியாழக்கிழமை கவனவீர்ப்புப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையம் மற்றும் மல்லிகைத்தீவு சிறுவர்களின் போஷாக்கு அபிவிருத்தி நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

கவனவீர்ப்புப் பேரணி புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியிலிருந்து ஆரம்பமாகி புதுக்குடியிருப்பு சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலம் சென்றடைந்து அங்கு மனுவொன்று பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

மனுவில், போதைப்பொருள் பாவனையால் குடும்பங்களில் பிரச்சினைகள் தலைதூக்கி சிறுவர்களின் மகிழ்வான சூழல் பறிக்கப்படுகிறது. அதனால் உள ரீதியான நெருக்கடிக்குள் அவர்கள் தள்ளப்படுகின்றனர். கல்விப் பெறுபேறுகள் வீழ்ச்சி யுறுகின்றது. எதிர்காலம் கேள்விக்குறியாகிறது. துஸ்பிரயோகங்கள் அதிகரிக்கிறது.

இவற்றைக் கட்டுப்படுத்தி சிறுவர்களின் பாதுகாப்பான சிறந்த எதிர்காலத்துக்கு வழியேற்படுத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம், முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் ஆகியவற்றுக்கும் மனுவின் பிரதிகள் அனுப்பப்பட்டன.

போராட்டத்தில் சுமார் 500 வரையான சிறுவர்கள், பெரியோர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-19)

## நோயாளருக்கு நீரிழிவு கைநூல்

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாண போதனா மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவரும் நீரிழிவு நோயாளர்களுக்கென ஆயிரம் நீரிழிவு கைநூல்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நீரிழிவு கழகத் தலைவர் தி.மைக்கல், மருத்துவமனையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்துக்கு கடந்த வியாழக்கிழமை அவற்றைக் கையளித்தார். நூல்களை மருத்துவர் ம.அரவிந்தன் பெற்றுக்கொண்டார். (ச)



## ஆக்கத்திறன் போட்டிகள் வெற்றியாளர்களுக்குப் பரிசு



கிளிநொச்சி, ஓக. 28

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆகியவை இணைந்து நடத்திய தேசிய ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி நிலையத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி முரளிதரன் தேதீஸ்வரன் பங்கேற்றார். (ச-ரி3-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 • 06 • 1947



மறைவு
07 • 09 • 2022

## அமரர் தெய்வேந்திரம் நகுலேஸ்வரன்

**திதி : அமாவாசை துவாதசி (28.08.2023)**

*அன்புடன் எமை அரவணைத்து எம் வாழ்வில்*
*என்றும் வழிகாட்டி ஒளியூட்டிய தெய்வமே*
*பண்புடன் பக்குவமும் பரிவும் மேலோங்க இப்பாரினிலே*
*குன்றிலிட்ட தீபம் போல் ஒளிர்ந்த பெருந்தகையே*
*கண்ணும் கருத்துமாய் கனிவுடன் எப்போதும் எமை காத்து*
*மண்ணில் மதிப்புற மனிதத்துடன் எமை வளர்த்திட்ட மகத்துவமே*
*விண்ணுலகம் ஏகி ஆறாப் பெருந்துயரில் எமை ஆழத்தி*
*ஆண்டொன்று கடந்திடினும் நீக்கமற நிலைத்திருக்கும் உங்கள்*
*நினைவலைகளுடன் என்றும் நாங்கள்*

**எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா, இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.**

புதுவீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

077 917 0357

நீங்கா நினைவுகளில்
குடும்பத்தினர்

(CS 51834)(K-1)

# மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 28

நாட்டின் பல பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, மட்டக்களப்பு, அம்பாறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-இ)

## மணமகன் தேவை

1982 ரேவதி கி.பா 7 அரச தொழில் புரியும் BA பட்டதாரி விவாகரத்து மணமகளுக்கு மணமகன் தேவை.

**077 545 2892**

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் - 2023
## தற்காலிக கடை இட ஒதுக்கீடு

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 14.09.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தலத்தில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. கடைகள் தொகுதி வாரியாகப் பின்வரும் வகையில் அமையும்.

1. **ஐஸ்கிறீம்**
2. **இனிப்புவகை**
3. **தேநீரக்கடை**
4. **மணிக்கடை**
5. **கச்சான்கடை**

**முக்கிய குறிப்பு:**

- முதல் மூன்று கடைத் தொகுகளுக்குமான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய கூறுவிலைக்கு வழக்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்
- அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தை பெற்று தொடர்பான வாடகை பணத்தை முழுமையாக செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்தி கொள்ளவும்.
- விபரங்கள் வழங்கவேண்டிய படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- **ஏலம் போடும் நாள் 01.09.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு**

துன்னாலை வடக்கு,
புலோலி.

(cr.40476) (N.1)

அறங்காவலர் சபை
**021 226 3074**

# மரண அறிவித்தல்



மலர்வு
14.07.1940

உதிர்வு
26.08.2023

## திருமதி பொன்னுத்துரை அன்னப்பிள்ளை

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று முன்தினம் (26.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை (முன்னாள், இ.போ.ச.சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், அருட்சோதி, சிவப்பிரகாசம், அருட்பிரகாசம் (சுவிஸ்), ஜெயசோதி, மங்களசோதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிறிதரன், அன்னலக்சுமி, சிவமலர் (சுவிஸ்), மகேந்திரநாதன் (முன்னாள், இ.போ.ச சாரதி), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துஸ்யந்தினி (லண்டன்), மயூரன் (சுவிஸ்), தர்சிகா, தர்சிகா (சுவிஸ்), செந்தூரன் (ஜேர்மனி), யதுகிரி, அஜந்தினி, ஆர்த்திகா, அபிராம் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், சாரங்கி, அபிரங்கி (லண்டன்), அனோஜ் (சுவிஸ்), சமீர், சாயரா (சுவிஸ்), ஜிவிஷன், டனுசயன், அஸ்மிதன், இஷான் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் கச்சாய் எறியால்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 411 2058
077 887 5823

(CR 40032) (K-1)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நானாட்டானில்
மனதிற்கினிய
புதிய இடத்தில்
உங்கள் சேவைக்காக

HNB நானாட்டான் கிளையிலுள்ள எமது அர்ப்பணிப்பு மிக்க அலுவலர்கள் இப்போது உமிலங்குளம் வீதி, நானாட்டானில் அமைந்துள்ள புதிய இடத்திலிருந்து உங்களுக்குத் தரமுயர்ந்த சேவை வழங்கத் தயாராக உள்ளனர்.

023 2030300

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

Hatton National Bank PLC - PQ 82

# நீதிமன்றத்தின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் எம்.பி.க்கள்

*சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்*

கொழும்பு, ஓக.28

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளக சிறப்புரிமைகளின் அடிப்படையில் நீதிபதிகள், சட்டத்தரணிகள் மீது முன்வைக்கப்படும் தொடர்ச்சியான விமர்சனங்கள் நீதித்துறையின் கௌரவத்தைக் குறைமதிப்பீடு செய்கின்றது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்யா நவரட்ணம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதியை தனிப்பட்ட முறையிலும், அவருடைய தீர்ப்பையும், நாடாளுமன்றத்தில் சரத் வீரசேகர கடுமையாக விமர்சனம் செய்திருக்கும் நிலையில், வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகள் கடந்த வெள்ளிக்கிழமை கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த விடயத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கவனத்துக்கும் கொண்டு சென்றிருந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக எடுக்கப்படவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே சங்கத்தின் தலைவர் கௌசல்யா நவரட்ணம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அண்மைய காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் காணப்படுகின்ற சிறப்புரிமைகளின் அடிப்படையில் நீதிபதிகள், சட்டத்தரணிகள் ஆகியோர் தொடர்பில் நாடாளுமன்றத்துக்குள் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

நீதிமன்றங்களின் தீர்ப்புகள் தொடர்பிலும் சில விமர்சனங்கள் நாடாளுமன்றத்துக்குள் வெளியிடப்படுகின்றன. இறுதியாக நாடாளுமன்ற உறுப்பினரால் நீதிபதி ஒருவர் விமர்சிக்கப்பட்டுள்ளார்.

நாம் இந்த விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமித்துள்ளோம்.

அந்தக் குழுவின் அவதானங்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்த கட்டமாக இறுக்கமான நடவடிக்கைகள் சிலவற்றை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவையும் நேரில் சந்தித்து இந்த விடயங்கள் சம்பந்தமாக எமது கரிசனைகளை வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். விரைவில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 நூல்கள் வெளியீடு!

கொடிகாமம், ஓக. 28

பொதுச் சுகாதாரப் பரிசோதகரான கவிஞர் சூரியகலா ஆ.ஜென்சன் றொனால்ட் எழுதிய 5 நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை கொடிகாமம் ஏ-9 வீதியிலுள்ள நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி எஸ்.சுதோகுமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி எஸ்.சிவசுதன், உசன் பவுண்டேசன் உபதலைவரும் மருத்துவருமான ஐ.ஜெபநாமகணேசன், உலக வள்ளுவர் வழி இணையப் பள்ளியின் இயக்குநர் ஜோதி ஜெயக்குமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்வில் 'உயிர்ப்பு' எனப்படுகின்ற தாய்சேய் நலம் தொடர்பான சுகாதார மேம்பாட்டு நூல், 'விழிப்பு' எனப்படும் தொற்றாநோய்களைத் தடுப்பதற்கான சுகாதார மேம்பாட்டு நூல், 'காப்பு' எனப்படும் உணவுப் பாதுகாப்பு சம்பந்தமான சுகாதார மேம்பாட்டு நூல், 'திறப்பு' எனப்படும் நேர்மயமான சிந்தனைகளைக் கட்டியெழுப்புதல் எனும் நூல், 'வனப்பு' எனப்படுகின்ற கவிதை நூல் ஆகியன வெளியிடப்படவுள்ளன. (ச-9-159)

# தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு சப்பறத் திருவிழா

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருவிழாவின் சப்பறத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் வெகுசிறப்பாக நடைபெற்றது.

நேற்று மாலை 5.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசைகள் ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து துர்க்கை அம்பாள், விநாயகர், முருகப் பெருமான், சண்டேஸ்வரர் ஆகிய தெய்வங்கள் உள்வீதியில் உலா வந்தனர். அதனைத் தொடர்ந்து நாற் தெய்வங்களும் மாலை 6.40 மணியளவில் சப்பறத்தில் எழுந்தருளியதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க இரவு 7 மணியளவில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சப்பறத் திருப்பவனி ஆரம்பமானது.

சப்பறத் திருப்பவனி இடம்பெற்றபோது நூற்றுக்கும் மேற்பட்ட மாதர்கள் கற்பூரச் சட்டிகள் எடுத்தும், பல ஆண் அடியவர்கள் பறவைக் காவடிகள் எடுத்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ம-66)



# அறநெறி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

முல்லைத்தீவு, ஓக. 28

முல்லைத்தீவு இந்துசமய அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்திப் பேரவை உருவாக்கம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ச-27)






# இராவணன் பூங்கா இயக்கச்சியில் திறப்பு

கிளிநொச்சி, ஓக. 28

கிளிநொச்சி - இயக்கச்சிப் பகுதியில் இராவணன் வனம் பூங்கா நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

நிலம் நற்பணிமன்ற நிறுவுநர் பொன். சுதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், 52ஆம் படைப்பிரிவின் கட்டளைத்தளபதி, பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பளை பிரதேச செயலர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-113)

# தேசிய கூட்டுறவுச்சபை புதிய பணிப்பாளர் தெரிவு



யாழ்ப்பாணம், ஓக. 28

இலங்கை தேசிய கூட்டுறவுச்சபையின் புதிய பணிப்பாளராக இ.அன்ரனி ஆனந்தராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பிலுள்ள இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையில் இடம்பெற்ற பணிப்பாளர்சபைத் தெரிவில் அவர் போட்டியின்றித் தெரிவாகியுள்ளார். இவர், யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் பணிப்பாளராக, வடக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவராக, தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் [illegible] உறுப்பினராகச் செயற்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்..

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய நேரிடும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முடிவுகளை எடுக்கலாம் சகோதர வகையில் செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண் டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் கவனம் அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவினையை...

**அநுர**

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் தொடர்பில் அநுர தெரிவித்ததாவது:-

'2005ஆம் ஆண்டில் ரணிலும், மஹிந்தவும் அரசியல் எதிரிகள் என்றனர். 2010 ஆம் ஆண்டில் இருவருக்கிடையிலும் போட்டி என்றனர். 2015ஆம் ஆண்டிலும் இரு அணிகளாகவே போட்டியிட்டனர். 2019ஆம் ஆண்டில் இரு அணிகளில் இருந்தனர். ஆனால், 2023இல் இணைந்து ஆட்சி அமைத்துள்ளனர். இதுதான் இவர்களுக்கிடையிலான அரசியல் டீல். பிளவுபட்டிருப்பதுபோல் காட்டிக்கொள்வார்கள், எனினும், உள்ளுக்குள் இணக்கம் இருக்கும். 2005ஆம் ஆண்டில் போரை முடிப்பது யார்? என்றும், 2010ஆம் ஆண்டில் போரை முடித்தது யார்? என்றும் பிரச்சாரம் இடம்பெற்றது, 2015ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் சர்வாதிகாரமா?, ஜனநாயகமா? என பிரச்சாரம் இடம்பெற்றது, 2019இல் தேசிய பாதுகாப்பு பற்றி பேசப்பட்டது. இதன்மூலம் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளும் மூடிமறைக்கப்பட்டன. மக்கள் இன்று உண்மையை உணர்ந்துள்ளனர். நாட்டில் இரு பிரதான முகாம்கள்தான் உள்ளன. ஒன்று ஜே.வி.பி. அது மக்கள் ஆட்சிக்கான சக்தி. மற்றைய முகாம் ஊழல், மோசடிகளில் ஈடுபடும் அணி. எனவே, ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் மட்டுமே நாடு முன்னேறும் - என்றார்.

**சஜித்**

இதேவேளை- 'ஆட்சியைப் பிடிப்பதற்காக 2019இல் அரங்கேற்றிய 'இனவாத' நாடகத்தின் 2ஆவது பாகத்தை தற்போது அரங்கேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறானவர்களுக்கு மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'13 என்கின்றனர், 13 பிளஸ் என்கின்றனர். இவையா்வும் போலியான வாக்குறுதிகளாகவே உள்ளன. ஜனாதிபதி கனவில் உள்ள சிலர், தமது பதவிகளை தக்கவைத்துக்கொள்ளவும், சுகபோக வாழ்வுக்காகவும் மக்களை ஏமாற்றுவதற்கு முற்படுகின்றனர்.

2019 ஆம் ஆண்டில் மக்களை எவ்வாறு ஏமாற்றி ஆட்சியை பிடித்தார்களோ அதன் 2ஆம் பாகத்தை அரங்கேற்றி வருகின்றனர். இனவாத ரீதியிலான பிரச்சாரங்கள் இதன் ஓர் அங்கமாகும். இனவாதம், மதவாதம் பரப்பி ஆட்சியைப் பிடித்தவர்களை மக்கள் விரட்டியடித்தனர் என்பதை நினைவில் வைத்துச் செயற்பட்டால் சிறந்தது' - என்றார். (அ-ம-44)

## மாம்பழம்...

உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ உற்சவத்தின் ஆறாம் நாள் மாம்பழத் திருவிழாவான நேற்றுமுன்தினம் மாலை, விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது. இதன்போது, பலத்த போட்டிக்கு மத்தியில் ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு குறித்த மாம்பழம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. (அ-ம-110,18)

## வறட்சியால்...

சுந்தரன் அறிவுறுத்தியுள்ளார். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற வறட்சி பாதிப்புத் தொடர்பான கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த, வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர், வறட்சியின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட தானிய விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலபோகத்துக்கு நிலங்களைத் தயார்ப்படுத்த முடியாமல் இருப்பதாகவும் இந்தக் காலதாமதம் காரணமாக குறுங்கால இனங்களைப் பயிரிட வேண்டி ஏற்படுமெனவும் 4ஆம் காலாண்டில் கடும் மழை கிடைக்குமானால் அவ்வாறு குறுங்காலப் பயிர்கள் அழிவடைய நேரிடுமெனவும் குறிப்பிட்டார். அத்தோடு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஒவ்வொரு குடும்பத்தினரும் அக்கறையுடன் மேற்கொள்ளவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ஒ-5)

## கேணிகள்,...

சுந்தரன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வறட்சி தொடர்பான கலந்துரையாடல் கடந்த 25ஆம் திகதி மாவட்டச் செயலர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே மாவட்டச் செயலர் மேற்படி அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

**கோரிக்கை முன்வைத்தால் உதவி**

நெடுந்தீவிலுள்ள குதிரைகள் மற்றும் கால்நடைகளுக்கான நீர்வழங்கல் தொடர்பாக நெடுந்தீவு பிரதேச செயலர் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போது, "நெடுந்தீவில் கால்நடைகளின் நீருக்காக 7 தொட்டி கள் காணப்பட்டபோதும் 2 தொட்டிகளுக்கே தற்போதைய கடும் வறட்சி காரணமாக நீர் நிரப்பப்படுகின்றது. இந்த வறட்சி தொடருமானால் இந்த நிலைமை மோசமடையலாம்" எனவும் குறிப்பிட்டார்.

கடற்படையினரின் நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் எழுவைதீவு மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுவதாகவும் நெடுந்தீவு குடிதண்ணீர்த் தேவை தொடர்பாக தங்களால் முடிந்த உதவியை செய்வதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இதேவேளை- நெடுந்தீவில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் சுத்தி கரிக்கப்படவேண்டிய கேணிகளைச் சுத்தப்படுத்தி உதவுமாறு கடற்படையினருக்கு மாவட்டச் செயலர் வேண்டு கோள் முன்வைத்தார். மாவட்டச்செயலர் கோரிக்கை விடுத்தால், குடிதண்ணீர்த் தட்டுப்பாடு தொடர்பாகத் தேவைப்படும் உதவிகளைச் செய்யத் தயாராகவுள்ளதாக இராணுவத்தினர் கூட்டத்தில் தெரிவித்தனர்.

**கேணிகள் துப்புரவு**

குடாநாட்டில் குறிப்பாக யாழ். நகரப்பகுதியிலுள்ள இயற்கையான குளங்கள் மற்றும் கேணிகளைத் தனியார் ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக்க அந்த நீர் நிலைகளுக்குப் பொறுப்பான திணைக்களங்களால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளு மாறு மாவட்டச் செயலரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. யாழ். மாநகரசபைக்குட்பட்ட தூர்வாரப்படாத குளங்கள் மற்றும் கேணிகளை மாநகரசபை பொறியியலாளரின் மேற்பார்வையின்கீழ் பொது அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாக தூர்வாரி சுத்தப்படுத்த முடியுமெனவும் அதற்குச் சில நிறுவனங் கள் தாமாகவே முன்வருவார்களென வும் யாழ்ப்பாணப் பிரதேச செயலரால் குறிப்பிடப்பட்டது. மேலும் மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள இவ்வாறான கேணிகளையும் நீர்நிலை களையும் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

**பொதுக் கிணறுகளை பயன்பாட்டுக்கு கொண்டுவருதல்**

மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் பொதுக் கிணறுகள், விவசாயக் கிணறுகள் பல பாழடைந்து பயன்பாடற்று காணப்படுகின்றன. அவற்றைச் சுத்தப்படுத்தினால் குடிதண்ணீர்த் தேவைக்குப் பயன்படுத்த முடியும். எதிர்காலத்தில் நன்னீரை சேமித்துவைக்க அவற்றைப் பயன்படுத்த முடியும்- என்றும் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. இதற்கமைய இவ்வாறான கிணறுகள் பற்றிய விவரங்களை ஒரு வார காலத்தினுள் சமர்ப்பித்து வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கும் அந்தந்தப் பிரதேச மக்களுக்கு வேலைக்காக உணவு பெறும் திட்டத்தினூடாக அந்தக் கிணறுகளைத் துப்புரவு செய்வதற்கான சாத்தியம் பற்றி ஆராயுமாறு உலக உணவுத் திட்ட அலுவலரிடம் மாவட்டச் செயலர் வேண்டுகோள்விடுத்தார். (ஒ-5)

## தெல்லியூர்...

இன்று காலை 6 மணியளவில் கொடித்தம்பப் பூசையும், காலை 7 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும் இடம்பெற்று காலை 9 மணியளவில் தேரில் துர்க்கை அம்பாள் ஆரோகணித்தலும், காலை 9.15 மணியளவில் சித்திரத்தேர் பவனியும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## பிரதான...

டுள்ளது. வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைகளுடன் தொடர்புடைய வழக்கில் பிரதான சந்தேகநபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளவரின் சகோதரர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்த 37 வயதான அவர் வவுனியா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். இரட்டைக்கொலைகளுக்குப் பழிவாங்கும் நோக்கத்துடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதா? அல்லது குழு மோதலாக இந்த விவகாரம் மாறுகின்றதா? என்ற கோணங்களிலும் பொலிஸார் விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர். (அ-ம-18)

## நடனமாடிய...

பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நாகராசா சசிதரன் (வயது - 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தெல்லிப்பழையில் உள்ள பிரபல பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒன்றுகூடலுக்காக அவர் கனடாவில் இருந்து வந்துள்ளார். தெல்லிப்பழையில் உள்ள பிரபல விருந்தினர் விடுதியில் இந்த ஒன்றுகூடல் இடம்பெற்றுள்ளது. நிகழ்வில் நடனமாடிக் கொண்டிருந்தபோதே அவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## பிரமிட்...

கள் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இலங்கை ரூபாவின் மதிப்பில் சுமார் 4 கோடி ரூபாவை மோசடி செய்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

கடந்த 19ஆம் திகதி கொழும்பு, பொரளை பகுதியிலுள்ள வீடொன்றில் 7 இலட்சம் ரூபா வாடகை செலுத்தி வசித்து வந்த சீனப்பிரஜை ஒருவர் தனது 7 மடிக்கணினிகள், 17 மில்லியன் ரூபா பணம் மற்றும் வாகனம் என்பன சிலரால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதன்படி கொழும்பு தெற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் பொலிஸார் தொலைபேசித் தரவுகள் மற்றும் சி.சி.ரி.வி. காட்சிகளை ஆராய்ந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது அவர்களில் சீனப்பிரஜையின் சாரதியும் அடங்குவதாகத் தெரியவந்துள்ளது. முறைப்பாடு செய்த சீனப்பிரஜை, சந்தேகநபர்களுக்கு 15 இலட்சம் ரூபாவைக் கொடுத்து தனது சொத்துக்களை அவர்கள் கொள்ளையடித்துச் செல்வதைப் போன்று பாசாங்கு செய்யச் சொன்னமை விசாரணைகளில் தெரியவந்தது. அதற்கமைவாக குறித்த சீனப்பிரஜையும் அவரது மற்றொரு சீன நண்பரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில் கொழும்பு துறைமுகநகரத்தில் வேலைத் திட்டங்களை மேற்கொள்வதாக இருவரும் நாட்டில் பெரியளவில் பிரமிட் மோசடித் திட்டத்தை மேற்கொண்டுள்ளதாகவும் இதன்போது 4 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரான சீனப்பிரஜை பிரமிட் மோசடித் திட்டத்தின் மூலம் பெற்ற பணத்தை கசினோ சூதாட்டத்துக்குப் பயன்படுத்தி இழந்தமையால் அதனை மறைப்பதற்காகவே இவ்வாறான போலியான கொள்ளை நாடகத்தை அரங்கேற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் சர்வதேச ரீதியான பிரமிட் வலைப்பின்னல் உடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம)

## யாழில்...

என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி இன்று நண்பகல் 12.11 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மல்லாகத்துக்கு நேராக சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது. அத்துடன் இன்று முதல் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி வரை இலங்கையின் அட்சரேகைகளுக்கு மேலாக சூரியன் செல்லவுள்ளது - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## பாலியல்...

விகாரையில் தங்கியிருந்த பெண் ஒருவரின் உதவியுடன் தப்பிச் சென்றுள்ளனர். இதன் பின்னர் துறவிகளின் உறவினர்களுக்குத் தகவல் வழங்கப்பட்டு அவர்கள் பொலிஸாருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம)

## கத்திமுனையில்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கத்திமுனையில் நகைகள் கொள்ளையிடப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் யாழ்ப்பாணம், சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த மூவரடங்கிய குழுவினர் வீட்டில் இருந்தவர்களைக் கட்டிவைத்துத் தாக்கி வீட்டிலிருந்த 20 பவுண் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், தீவிர விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ-ம-20,26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறல் தீர்வு கேள்விக்குறியே

## யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவு சம்மேளனத் தலைவர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 28

இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறிய வருகையால் பாதிக்கப்பட்டுள்ள எமது வாழ்வாதாரத்தைக் காத்து, பிரச்சினைக்குத் தீர்வுகாண அண்மையில் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதியால் கூட முடியவில்லை. எமது மீனவர்களின் வாழ்வாதாரப் பாதிப்புக்கு தீர்வு கிடைக்கும் என்பது கேள்விக்குறியே - இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் புனிதப் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது இவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்தியப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடியால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ச்சியாகப் பறிக்கப்பட்டு பாதிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை தொடக்கம் மன்னார் வரையான நமது கடற்பரப்புக்குள் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள்.

இதுதொடர்பில் நாமும் பல தடவைகள் ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோரிடம் முறையிட்டு வருகிறோம்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணத்தின் போது, அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறு இந்தியப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்லுமாறு கோரிக்கை விடுத்தோம். ஆயினும் ஜனாதிபதி எமது பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமரிடம் பேசியதாகத் தெரியவில்லை.

எமது மீனவர்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கி வரும் பாதிப்புக்கு தீர்வு கிடைக்குமென்பது கேள்விக் குறியாகியுள்ளது - என்றார். (ச-27)


**வேலையாட்கள் தேவை**

யாழில் இயங்கும் போட்டோகொப்பி புத்தக கடைக்கு வேலையாட்கள் தேவை

சம்பளம் : 18 000 - 25 000

அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்பு : 076 8323 682

**லொறி விற்பனைக்கு**

அசோக் லேடன் சுப்ப கொமற் தட்டு லொறி விற்பனைக்குண்டு.

**077 263 4326**

(cs 51836) (N.1)

DHL **வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**



**மிகக் குறைந்த கட்டணத்தில்**

UK - 400/=, Canada - 1000/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம்நெற்** T.P: 0777 55 45 28

321, K.K.S. Road, Jaffna.

**பெண் உதவியாளர் தேவை**

இந்தியாவில் நடனக் கல்லூரியில் பயிலும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட லண்டன் மாணவி (வயது 23) ஒருவருக்கு அவருடன் உதவியாக இருப்பதற்குப் பெண் உதவியாளர் (35 வயதுக்குட்பட்டவர்) தேவை. தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி செய்து தரப்படும். (2 வருடங்களுக்கு மட்டும்)

**076 055 7861**

(CS/51826) AH-1

**காணி விற்பனைக்கு**

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திற்கு முன்னால் 1 1/4 பரப்பு 2 குழி 10 அடி ஒழுங்கை கொண்ட வெட்டுக் கிணறு மற்றும் மலசல கூடம் அமைய பெற்றுள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 664 8287
076 651 7648

(CS 51816) A-1

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **33 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு. கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.

நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.

செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம், நல்ல சூழல்.

3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன். **நிலப்பரப்பு பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- குரு 076 755 8606, 077 8743 204, 077 2880 152.


## ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 09 - 1959



மறைவு 25 - 08 - 2023

**கிருஷ்ணர் மகேந்திரராசா (சின்னண்ணை)**

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் மகேந்திரராசா (சின்னண்ணை) அவர்கள் கடந்த (25.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற ஆறுமுகம் நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், லோகநாயகியின் அன்புக் கணவரும், மிதுலா (பிரான்ஸ்), யதுசன், திவானுயன் ஆகியோரின் பாசமிகு அப்பாவும், ஜெயபிரதாஸின் அன்பு மாமனாரும், ஷிரண்ணனின் அன்பு பேரனும், சிவராசா (ஜேர்மன்), மீனசுலோஜனா (சுவிஸ்), இந்திரராசா (சுவிஸ்), மதனராசா ஆகியோரின் அன்பு சகோதரரும், பற்குணசிங்கம் (கனடா), ஜெகநாதன், லங்காதேவி (ஜேர்மனி), ராமசந்திரன் (சுவிஸ்), சுஜாத்தா (சுவிஸ்), புஸ்பலீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.08.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதான வீதி, சுழிபுரம்.
076 4343 052

தகவல் :
குடும்பத்தினர்

(CS 26103) (K-1)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 03 . 06 . 1973



மறைவு 24 . 08 . 2023

**மரியஸ்ரான்லி றெக்னோ ஜெயதரன்**

(கிராம அலுவலர் - J / 257 இருபாலை தெற்கு)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், கிராம அலுவலர்களும்,**
**பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு - கோப்பாய்.**

(Cs26083) (N.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.